**கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்,**
**தமிழ்நாடு, சென்னை -35.**
**முன்னிலை: திரு.க.விஜயேந்திர பாண்டியன் இ.ஆ.ப,**

**செ.மு.ந.க.எண்.30675/2020/எம்1** **நாள். 30.08.2022**

| | | |
|---|---|---|
| **பொருள்** | பணியமைப்பு - கருவூலம் மற்றும் கணக்குத் துறை - சென்னை ஓரலகு -திருமதி.L.சர்மிளா, இளநிலை உதவியாளர், கருவூலம் மற்றும் கணக்கு ஆணையரகம், சென்னை - கருணை அடிப்படையில் பணி நியமனம் - பணிவரன்முறை- ஆணை வழங்கல் | |
| **பார்வை** | 1. | அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள்.23.01.2020 |
| | 2 | அரசாணை (3ப) எண்.16, நிதி (க.க.2)த் துறை, நாள்.08.10.2020 |
| | 3 | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.30675/எம்1/2020 நாள்.28.10.2020 |
| | 4 | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் கடித ந.க.எண்.30675/2020/எம்1 நாள்.21.09.2021 மற்றும் 22.04.2022 |
| | 5 | அரசாணை (3ப) எண்.9, நிதி (கருவூலக் கணக்கு-2)த் துறை, நாள்.04.08.2022 |

********

**ஆணை:**

கருவூலம் மற்றும் கணக்குத் துறை, திருவள்ளூர், மாவட்ட கருவூல அலகில் சார்நிலைக் கருவூலம், திருத்தணியில் ,இளநிலை உதவியாளராக பணிபுரிந்து 08.08.2012 - அன்று பணியிலிருக்கும் போது இயற்கை எய்திய திரு.S.V.லோகைய்யா என்பவரின் மகள் திருமதி.L.சர்மிளா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கிடுமாறு விண்ணப்பித்ததைத் தொடர்ந்து அவரது கல்வித் தகுதியின் அடிப்படையில் கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர்(நிர்வாகம்), சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து உத்தரவிடப்பட்டு தனியர் கருவூலக் கணக்கு ஆணையரகம், சென்னையில் 28.10.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்வது தொடர்பாக, பார்வை 2-இல் காணும் அரசாணையில், திருமதி.L.சர்மிளா என்பவர்

திருமணமான பெண் வாரிசுதாரர் என்பதால் அவர் பொருட்டு, கருணை அப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்க ஏதுவாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15ஐ தளர்வு செய்து பணிநியமன ஆணை வழங்க கருவூலக் கணக்கு ஆணையருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து பார்வை 3-இல் காணும் செயல்முறை ஆணையில், திருமதி.L.சர்மிளா (காலஞ்சென்ற திரு.S.V.லோகையா, இளநிலை உதவியாளர், மாவட்டக் கருவூலம், திருவள்ளூர் என்பவரின் மகள் (கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் சட்டம் (பணி நிபந்தனைகள்) 2016-ல் பிரிவு 17-ன் உட்பிரிவு (1)-ன் படி தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார், மேலும் அச்செயல்முறை ஆணையின்படி தனியர் சென்னை மாவட்டக் கருவூல அலகில் இளநிலை உதவியாளராக 28.10.2020 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார் எனவும்

பார்வை 5-இல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வழங்கியுள்ள ஆணைகளின் படி, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாக பணிபுரிந்து வரும் திருமதி.L.சர்மிளா, இளநிலை உதாவியாளரின் தற்காலிகப் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், அப்பதவிற்குரிய மற்றும் கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திருமதி.L.சர்மிளா, இளநிலை உதவியாளரின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 28-ன் உடபிரிவு (1)-ன் படி தனியர் பணியேற்ற நாளான 28.10.2020 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின் படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதுமிருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியக்கு தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார் எனவும்

ஆணையிடப்படுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெறத் தகுதியுடையவராகிறார். மேலும் தனியரின் பணிவரன்முறை குறித்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் உரிய அலுவலர் அவர்களால் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஓம்/– க.விஜயேந்திர பாண்டியன்
கருவூலக் கணக்கு ஆணையர்

பெறுநர்:

1. திருமதி.ட.சர்மிளா, இளநிலை உதவியாளர்,
   கருவூலம் மற்றும் கணக்கு ஆணையரகம்,
   சென்னை
   (உரிய வழிமுறையாக)
2. முதுநிலை கண்காணிப்பாளர், "எம்" பிரிவு,
   கருவூலக் கணக்கு ஆணையரகம்,
   சென்னை–35
3. இருப்புக் கோப்பு // உதிரி

// ஆணைப்படி அனுப்பலாகிறது //

30/8/22

முதுநிலை கண்காணிப்பாளர்

சோ.ச
30/8/22

க.க.எண் 025280/2021 /எம்3

கருவூலக் கணக்கு
ஆணையரகம் சென்னை-35
நாள். 08-2022

//நகல் சார்பு செய்யப்படுகிறது//

பெறுநர்.

திருமதி. ட.சர்மிளா,
இ.நி.உ.
க.க. ஆணையரகம்.
சென்னை - 35

கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்).
கருவூலக் கணக்குத்துறை ஆணையரகம்
சென்னை–600 035.

30.08.22

30/8/22

3